வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=


# ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 24.06.2026 புதன்கிழமை | இதழ் : 169 | பக்கங்கள் : 08

# சுரேஷ் சாலேயின் உயிருக்கு எந்தவித ஆபத்தும் இல்லை!



### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று உறுதி

கொழும்பு, ஜூன். 24

சுரேஷ் சாலே தற்போதும் சுயநினைவுடன், சாதாரணமாக ஆடை அணிந்து, நடமாடும் உடல் தகுதியிலேயே உள்ளார். எனவே, அவரது உயிருக்கு எந்தவித ஆபத்தும் இல்லை என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று உறுதியளித்தார்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள அரச புலனாய்வு சேவையின் முன்னாள் பிரதானி சுரேஷ் சாலே தொடர்பான விவகாரம் மற்றும் அவரது உடல்நிலை குறித்து அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவி யலாளர் சந்திப்பில் தெளிவுபடுத்தியுள்ளார்.

சுரேஷ் சாலேக்கு சித்திரவதை செய்யப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட் டுகள் மற்றும் அவரது உணவுத்தவிர்ப்பு போராட்டம் குறித்து ஊடகவியலா ளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

சுரேஷ் சாலே அடைத்து வைக்கப்பட்டிருந்த சிறிய அறையில் போதிய வசதிகள் இல்லை என்றும், அவருக்குச் சித்திரவதைகள் செய்யப்பட்ட தாகவும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை மனித உரிமைகள்

07

# செங்கோலை தூக்க முயன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள்!

### பாராளுமன்றத்தில் பரபரப்பு

கொழும்பு, ஜூன். 24

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சி உறுப்பினர் கள் செங்கோலைத் தூக்க முயன்ற சம்பவம் பெரும் பரப ரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாராளுமன்றம் நேற்று கூடி விவாதம் இடம் பெற்றி ருந்தவேளை, அவசர விவாதம் ஒன்றை

07

# செம்மணி புதைகுழியில் இதுவரை 412 எலும்புக்கூடுகள் அடையாளம்!

யாழ்ப்பாணம், ஜூன். 24

செம்மணி சித்துபாத்தி மனிதப் புதைகுழியில் இரு ந்து நேற்று மேலும் 19 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக் கப்பட்டுள்ளன.

செம்மணி புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வு பணியின் 32ஆம் நாள் அகழ்வுப் பணிகள் நேற்றைய தினம் நடைபெற்றபோதே இவை அகழ்ந்தெடுக்கப் பட்டுள்ளன.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின் போது, மொத்தம் 412

07

# தமிழ் மக்களிடம் இராணுவம் தங்க நகைகள் பெறவில்லை!

### சிறீதரனுக்கு பாதுகாப்பு பிரதி அமைச்சர் பதில்

கொழும்பு, ஜூன். 24

இலங்கை இராணுவத்தினரால் எந்தவொரு சந்தர்ப் பத்திலும் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களிடமிருந்து எந்த வொரு தங்க நகைகளும் பெறப்படவில்லை என பாது காப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர பாராளுமன் றத்தில் தெரிவித்தார்

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

07

# மாணவர்களின் பாதுகாப்புக்கு அதிபர்களே முழுப் பொறுப்பு!

### துன்புறுத்தல் முறைப்பாடுகளை மூடிமறைத்தால் கடும் நடவடிக்கை

கொழும்பு, ஜூன். 24

பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதும், பாலியல் துன்புறுத்தல்கள் அல்லது துஷ் பிரயோகங்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக் கப் பெறும்போது அதற்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுப்பதும் பாடசாலை அதிபர்களின் முழுமையான பொறுப்பாகும் என்று கல்வி அமை ச்சின் செயலாளர் நாலக கலுவெவ

07

# புதிய அரசமைப்பு நிச்சயம் உருவாகும்



### பிரதமர் ஹரிணி உறுதி

கொழும்பு, ஜூன். 24

புதிய அரசமைப்பை இயற்றும் விடயத்துக்கு தற் போது முன்னுரிமை அளிக்கப்படவில்லை என்பதை ஏற் கின்றோம். ஆனாலும் புதிய அரசமைப்பு நிச்சயம் உரு வாக்கப்படும் என்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது." என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரி வித்தார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்குரிய

07

# காணிப் பிரச்னைகளை உடன் தீருங்கள்! பொதுமக்களை அலைக்கழிக்கக்கூடாது!!

### அதிகாரிகளுக்கு வடக்கு ஆளுநர் கடுமையான பணிப்புரை




யாழ்ப்பாணம், ஜூன். 24

மக்களின் காணிப் பிரச்னைகளைத் தீர்ப்பதுதான் பிரதேச செயலாளர்களின் முக்கிய பொறுப்பாகவும் கடமையாகவும் இருக்க வேண்டும். பொதுமக்களை அலை க்கழித்துக் கொண்டிருக்காதீர்கள். நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக் குள் மக்களின் காணிப்

07

# மக்களின் காணிக்குள் விவசாய பண்ணை; புதிய பெயர்ப்பலகை நாட்டும் இராணுவம்!



யாழ்ப்பாணம், ஜூன். 24

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்ப ட்டுள்ள தனியார் காணிக்குள் காண ப்படும் இராணுவத்தின் விவசாய பண்ணைக்கு புதிய பெயர்ப்பலகை நாட்டும் நடவடிக்கையில் இராணு வத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

வலி. வடக்கில் இருந்து சுமார் 36 வருடங்களுக்கு

07

# தேர்தல்களில் 'அழியாத மை' பாவனை இனி நீக்கப்படும்!

கொழும்பு, ஜூன். 24

இலங்கையில் தேர்தல்களின் போது வாக்காளர்களின் விரல்களில் அடையாளமிடப்படும் "அழியாத பூச்சு" முறையை முழுமையாக நீக்குவதற்கான சட்ட ரீதியான படிமுறைகளை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீ காரம் வழங்கியுள்ளது.

அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள உத்தியோ கபூர்வ அமைச்சரவை தீர்மானங்களின்படி, ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள இந்த விசேட யோசனைக்கு அமை ச்சரவை தனது உடன்பாட்டைத் தெரிவித்துள்ளது.

இலங்கையின் தேர்தல் சட்ட ஏற்பாடுகளின்படி,

07

# சாலேயின் குடும்பம் பாப்பரசருக்கு கடிதம்

கொழும்பு, ஜூன். 24

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் தடுப்புக் காவ லில் உள்ள அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் தலைவர் சுரேஷ் சாலே எதிர்நோக்கும் மனிதநேயப் பிரச்னைகளில் தலையிடுமாறு கோரி, அவரது குடும்ப உறவினர்கள் நேற்று திருத்தந்தை லியோவுக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

இதற்கமைய, இலங்கைக்கான திருத்தந்தையின் தூது வரான அப்போஸ்தலிக்க நன்சியோவிடம் குறித்த கடித த்தை கையளிக்கும் நடவடிக்கை நேற்று காலை மேற் கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசா ரணைகளின் பின்னணியில் கைது செய்யப்பட்டு

07

# ஞானசார தேரருக்கு 9 மாத சிறை உறுதி!

கொழும்பு, ஜூன். 24

இஸ்லாமிய மார்க்கத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளி யிட்டு, இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தைச் சீர்குலைக்க செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ், பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேர ருக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் விதித்த 9 மாதச் சிறைத்தண்டனையை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உறுதி செய்துள்ளது.

குறித்த சிறைத்தண்டனையிலிருந்து தன்னை

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு பதிலாகப் புதிய சட்டம் விரைவில்!

## ஜனாதிபதி அநுரகுமார அறிவிப்பு

கொழும்பு, ஜூன். 24

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக, திட்டமிடப்பட்ட குற்றங்களை ஒடுக்குவதற்கும் பொதுமக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் புதிய சட்டம் ஒன்று அறிமுகப் படுத்தப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் எதிர்கால பாதுகாப்பு மற்றும் சட்ட மறுசீரமைப்புகள் குறித்து கருத்து வெளியிடும்போதே ஜனாதிபதி இதனை வலியுறுத்தியுள்ளார்.

நீண்ட காலமாக உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகியிருக்கும் தற்போதைய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக தற்போதைய சமூகத்துக்குப் பொருத்தமான வகையில் இந்த புதிய சட்டக் கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதன் மூலம் திட்டமிடப்பட்ட குற்றக் கும்பல்களை ஒடுக்குவதற்கும், நாட்டின் சாதாரண குடிமக்களின் மனித உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கும் எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## வரணி மத்திய கல்லூரி அரங்கை திறந்து வைத்த இராணுவத் த



யாழ்ப்பாணம், ஜூன். 24

வரணி மத்திய கல்லூரியில் புதிதாக அமைக் கப்பட்ட விளையாட்டு மைதான அரங்கு நேற்று திறந்து வைக் கப்பட்டது.

லண்டனிலுள்ள வரணி ஒன்றியத்தின் நிதி உதவியில் இராணுவத்தால் இந்த விளையாட்டரங்கு அமைக்கப்பட்டு பாடசாலை சமூகத்திடம் கையளிக் கப்பட்டது.

கல்லூரியின் முதல்வர் ஆர்.கோகுலராகவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பி.கே.ஜி.எம். லசந்த ரொட்றிக்கோ கலந்துகொண்டு மைதான அரங்கை திறந்து வைத்தார்.

யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி கே.ஜே.என்.எம்.பி.கே. நவரத்ன, இலண்டன்-வரணி ஒன்றியத்தின் இணைப்பாளர் தம்பு செல்வகுமார், அயற்பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

## தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் ஒலுமடுவில் மாணவர்களுக்கு உதவி



வவுனியா, ஜூன். 24

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஒலுமடு பகுதியை சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட தேவையுடைய மாணவர்களுக்கு வவுனியா தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பிரதேச சபை உறுப்பினர் செ.சுசீலன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஒலுமடு பகுதியைச் சேர்ந்த 20 மாணவர்களுக்கு சுமார் 50,000 ரூபாய் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப் பட்டன.

இந்த நிகழ்வில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம், தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் தலைவர் ந.கருணாநிதி, செயலாளர் மு.விஜய காந்தன், பிரதேச சபை உறுப்பினர்களான த.தனுசன், கருணாநிதி, பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளர் பாலச்சந்திரன் சிந்துஜன், கட்சியின் வவுனியா வடக்கு பிரதேசக் கிளை தலைவர் வை.பூபால சிங்கம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (அ)

## வடக்கு விளையாட்டுத்துறையை மேம்படுத்த உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கத் தயார்!

### மாகாண ஆளுநர் வேதநாயகன் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன். 24

வடக்கு மாகாணத்தில் விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு தயாராக உள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்டத் தடகளப் போட்டிகள், யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆளுநரால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கல்வியால் மாத்திரம் ஒரு மாணவன் முழுமையடைந்துவிட முடியாது என்பதை நான் பல இடங்களிலும் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகின்றேன். கல்விக்குச் சமாந்தரமாக இணைப்பாடவிதானச் செயற்பாடுகளான கலை மற்றும் விளையாட்டுத்துறைகளிலும் மாணவர்கள் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். அதன் மூலமே முழுமையான ஆளுமை வளர்ச்சியைப் பெற முடியும்.




தற்காலத்தில் மாறிவரும் உணவுப் பழக்கவழக்கங்களால், பிள்ளைகளின் உடல் ஆரோக்கியம் பெரும் கேள்விக்குறியாக மாறியுள்ளது. கல்வியில் சிறந்த அடைவுகளைப் பெறுவதற்கு ஆரோக்கியமான உடலும் உளமும் அவசியமாகும். அதனை இவ்வாறான விளையாட்டுச் செயற்பாடுகளின் ஊடாகவே பெற்றுக்கொள்ள முடியும்.

மாகாண மட்டப் போட்டிகளில் தமது திறமைகளை வெளிப்படுத்தும் அனைத்துப் பிள்ளைகளுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நீங்கள் தேசிய மட்டப் போட்டிகளிலும் எமது மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி, வெற்றிவாகை சூடி மாகாணத்துக்குப் பெருமை தேடித் தரவேண்டும்.

வடக்கு மாகாணத்தில் விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு நாம் தயாராக உள்ளோம். இது தொடர்பில் நான் தனிப்பட்ட ரீதியிலும் விசேட கவனம் செலுத்தி வருகின்றேன். நீங்கள் விளையாட்டுத்துறையில் சாதிப்பதற்குத் தேவையான அனைத்து வழிகளிலும் உதவக் காத்திருக்கின்றோம்-என்றார்.

இந்த ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜெயச்சந்திரன், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

## வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவர் பாராளுமன்றத்தின் கன்னியமர்வு

யாழ்ப்பாணம், ஜூன். 24

வைத்தீஸ்வராக் கல்லூரியின் மாணவர் பாராளுமன்ற கன்னியமர்வு நேற்றுக் காலை பாடசாலையின் பிரதான மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வில் செயலாளர் நாயகம் பத்மநாதன் பாஸ்கரன் தலைமையேற்றதுடன், சமூக விஞ்ஞானப் பாட ஆசிரியர் ஆலோசகர் திருமதி திரேசா மரியநாயகம், வைத்தீஸ்வராக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி வாசுகி தவபாலன் மற்றும் கல்லூரியின் பழைய மாணவரான கலாநிதி பி.திருச்செல்வன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.

விருந்தினர்கள் வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து கொடியேற்றம், மங்கல விளக்கேற்றல் மற்றும் சபாநாயகர் செயலாளர் நாயகத்திடம் ஆசி பெறும் நிகழ்வுகள் இடம்பெற்றன. பின்னர் மாணவர் பாராளுமன்றத்தின் சபாநாயகர் வருகையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பாராளுமன்ற பொறுப்பாசிரியரின் உரையைத் தொடர்ந்து உறுப்பினர்களின் சத்தியப் பிரமாணம் இடம்பெற்றது. அதன் பின்னர் செயலாளர் நாயகத்தின் பிரகடனம், செயற்றிட்டப் பிரேரணை முன்வைப்பு, பிரதமரின் உரை, சபை முதல்வரின் உரை மற்றும் செயலாளர் நாயகத்தின் உரை ஆகியன இடம்பெற்றன.

தொடர்ந்து பிரதம விருந்தினர், கௌரவ விருந்தினர் மற்றும் சிறப்பு விருந்தினர்களின் உரைகள் இடம்பெற்று மாணவர்களின் தலைமைத்துவம், பொறுப்புணர்வு மற்றும் ஜனநாயகப் பண்புகளை வளர்த்தெடுப்பதன் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தப்பட்டது. (அ)

## ஆனைவிழுந்தான்குளம் கரும்பு ஆலையின் செயற்பாடுகளை பார்வையிட்டார் ஆளுநர்!

கிளிநொச்சி, ஜூன். 24

கிளிநொச்சி - ஆனைவிழுந்தான் குளம் கரும்பு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் கரும்புத் தொழிற்சாலையின் செயற்பாடுகளை வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் நேற்றுக் காலை நேரில் பார்வையிட்டார்.

இந்த விஜயத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் சுப்பிரமணியம் முரளிதரன், கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளர் மருங்கன் மோகன் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இதன்போது தொழிற்சாலையின் தற்போதைய செயற்பாடுகள், உற்பத்தி நடவடிக்கைகள் மற்றும் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆளுநர் விரிவாக கேட்டறிந்தார்.

அத்துடன், கரும்பு உற்பத்தியாளர்களின் பங்களிப்பு மற்றும் தொழிற்சாலையின் செயல்திறனை மேலும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

## முல்லைத்தீவில் யானை தாக்கி இளைஞர் பரிதாபமாக மரணம்!

முல்லைத்தீவு, ஜூன். 24

முல்லைத்தீவு மாவட்டத்தில் யானை தாக்குதலுக்கு இலக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு குமுழமுனைப் பகுதியைச் சேர்ந்த இளைஞரான சர்வீதன் நேற்று முன் தினம் இரவு இத்திமடு கிராமத்தில் உள்ள தனது வயலுக்கு காவலுக்குச் சென்றிருந்த நிலையில் நேற்று அதிகாலை வயலுக்குள் புகுந்த காட்டு யானை தாக்கியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
24.06.2026 புதன்கிழமை

பராபவ வருடம், ஆனி 10

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# கத்தோலிக்க திருச்சபையும் கம்மன்பிலவும்

முன்னாள் அரச புலனாய்வு தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதை தொடர்ந்து ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளைச் சுற்றி தீவிரமடைந்திருக்கும் அரசியல்மயமான வாதப்பிரதிவாதங்கள் மதங்களுக்கு இடையில் குரோதங்களை வளர்க்கக்கூடிய ஆபத்தைக் கொண்டிருக்கின்றன.

சுரேஷ் சாலேக்காக குரல் கொடுப்பதில் முன்னரங்கத்தில் நிற்கும் சிங்கள பௌத்த கடும்போக்கு தேசியவாத அரசியல்வாதிகளில் ஒருவரான பிவிதுறு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில கத்தோலிக்க திருச்சபைக்கு சவால் விடுத்திருப்பதுடன் குண்டுத் தாக்குதல்களின் "உண்மையான பயனாளிகளில்" கொழும்பு பேராயர் மல்கம் கார்டினல் ரஞ்சித்தும் ஒருவர் என்று மறைமுகமாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

இதையடுத்து குண்டுத். தாக்குதல்கள் தொடர்பில் நீண்டகாலமாக நிலவி வரும் சர்ச்சை ஒரு மதவாத திசையில் திரும்புவதற்கான ஆரோக்கியமற்ற அறிகுறிகள் தெரிகின்றன.

கம்மன்பில நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொழும்பில் நடத்திய செய்தியாளர்கள் மகாநாட்டில் பேராயர் கார்டினல் ரஞ்சித்தின் பதவி குறித்தும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களுக்கு பின்னரான காலப்பகுதியில் அவரது பதவிக்கால நீடிப்புகள் குறித்தும் கேள்வியெழுப்பினார்.

குண்டுத் தாக்குதல் பேரவலத்தைத் தொடர்ந்து கார்டினல் தனது ஓய்வு வயதைத் தாண்டியும் பல தடவைகள் சேவை நீடிப்பைப் பெற்றதாகக் குறிப்பிட்டதுடன் குண்டுத் தாக்குதல்களின் விளைவாக ஏற்பட்ட அரசியல் மாற்றங்களினால் யார்யாரெல்லாம் பயனடைந்தார்கள் என்று எழுப்பிய கேள்வி பேராயரை மறைமுகமாக குற்றஞ்சாட்டுவதாக இருந்தது.

கொழும்பு மறைமாவட்டத்தின் ஊடகப் பேச்சாளர் வணபிதா சிறில் காமினி பெர்னாண்டோவை நோக்கி கம்மன்பில முன்வைத்த பத்துக் கேள்விகள் பல முக்கிய விடயங்களை மையமாகக் கொண்டவையாக இருக்கின்றன.

சுரேஷ் சாலே தான் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரி என்று வணபிதா காமினி பெர்னாண்டோ ஐந்து வருடங்களுக்கு முன்னர் நேர்காணல் ஒன்றில் கூறியதை செய்தியாளர்கள் மகாநாட்டில் சுட்டிக் காட்டிய பிவிதுறு ஹெல உறுமய தலைவர் அதற்கான ஆதாரங்கள் எவை என்று கேள்வியெழுப்பினார்.

குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் திருச்சபை முன்னுக்குப் பின் முரண்பாடான கருத்துக்களை முன்வைத்து வந்திருப்பதாக குற்றஞ்சாட்டுவதே கம்மன்பிலவின் நோக்கம் என்று தெரிகிறது.

ஆனால், கொழும்பு மறைமாவட்டமும் கத்தோலிக்கத் தலைமைத்துவமும் இத்தகைய குற்றச்சாட்டுக்களை ஏற்கெனவே நிராகரித்து வந்திருப்பதுடன் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான உண்மைகளைச் சிதைப்பதற்கும் முறையான பொறுப்புக் கூறலில் இருந்து திசை திருப்புவதற்கும் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் என்றே கம்மன்பில போன்ற அரசியல்வாதிகளின் குற்றச்சாட்டுக்களை வகைப்படுத்தின.

குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் உள்ள பாதுகாப்புக் குறைபாடுகள் மற்றும் சூத்திரதாரிகள் பற்றிய விரிவான , வெளிப்படையான உண்மையைக் கண்டறிவதே திருச்சபையின் நோக்கம் என்பது தெளிவாக கூறப்பட்டு வருகின்ற போதிலும், ஒரு அரசியல் உள்நோக்கத்துடன் இந்த விவகாரத்தில் தலையீடுகளைச் செய்கின்ற அரசியல்வாதிகளில் ஒருவராக அடையாளம் காணப்படும் கம்மன்பில குண்டுத் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்ட கத்தோலிக்க சமூகத்தின் தலைவரை அந்த மக்களின் அவலங்களினால் பயனடைந்தவராக காண்பிக்க முயற்சிப்பது பாரதூரமான ஒரு நிந்தனையாகும்.

# பிரித்தானியாவின் ஆழமான அவதிக்கு ஒரு புதிய பிரதமர் தீர்வாகிவிட முடியுமா?



பத்து ஆண்டுகளுக்கு முன்பு இதே வாரத்தில், பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேற (Brexit) வாக்களித்த செய்தி கேட்டு நான் தென்கிழக்கு லண்டனில் கண்விழித்தேன். அப்போது 7 வயதாக இருந்த என் மூத்த மகள், "பிரெக்ஸிட்" என்றால் என்ன என்று கேட்டது எனக்கு நினைவிருக்கிறது. பிரித்தானியா ஐரோப் பாவை விட்டு வெளியேறப் போகிறது என்று நான் கூறினேன். அவளோ குழப்பமடைந்தாள். "அவர்கள் எங்கே போக விரும்புகிறார்கள்?" என்று கேட்டாள். "ஆப்பிரிக்காவிற்கா?"

அப்படித்தான் அன்று தொடங்கிய அரசியல் கொந்தளிப்பு இன்றுவரை ஓய்ந்தபாடில்லை. திங்கட்கிழமை (22) ப்ரெக்ஸிட்டுக்குப் பின்னரான ஆறாவது பிரதமர் தனது பதவியை இராஜினாமா செய்தார். இரண்டு ஆண்டுகளுக்கும் குறைவான காலத்திற்கு முன்னர் பெரும் தேர்தல் வெற்றியைப் பெற்ற கீர் ஸ்டார்மர் வாக்காளர்களின் நம்பிக்கை யையும், தன் சொந்தக் கட்சியிலுள்ள பல அதிகாரிகளின் நம்பிக்கையையும் இழந்துவிட்டார்.

அடுத்ததாகப் பொறுப்பேற்கக் கூடிய நபர் கவர்ச்சிகரமான ஆளுமை கொண்டவர், பிரபல மானவர், மிக முக்கியமாக, இங்கிலாந்தின் வடக்குப் பகுதியில் உள்ள ஒரு சாதாரண பின்னணியில் இருந்து வந்தவர். ஆனால் அதுமட்டும் போதுமா? பிரித்தானியாவின் பொருளாதாரப் பிரச்சினைகள் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறியதால் மேலும் மோசமடைந்துள்ளவை எவ்வளவு கடுமையானவை என்றும், அதை வெறும் தலைமை மாற்றத்தால் மட்டும் தீர்த்துவிட முடியாது என்றும் இன்று நான் எழுதுகிறேன்.

**பத்து ஆண்டுகள், ஆறு பிரதமர்கள் இதற்கான அறிகுறி ஏற்கனவே தென்பட்டது.**

முதலாவதாக, பிரெக்ஸிட்டின் பின்னணியில் இருந்த நைஜல் ஃபரேஜ் தலைமையிலான வலதுசாரி மக்கள்செல்வாக்கு மிக்க "றிஃபார்ம் யூ.கே" (Reform U.K.) கட்சி, ஒரு வருடத்திற்கு முன்பே கருத்துக்கணிப்புகளில் ஆளும் தொழிற்கட்சியை (Labour Party) முந்தியது. பின்னர் இங்கிலாந்து முழுவதும் நடந்த உள்ளாட்சித் தேர்தல்களில் தொழிற்கட்சியை அது தோற்கடித்தது. இதைத் தொடர்ந்து ஸ்டார்மர் இராஜினாமா செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் நிறுத்தப்படவே இல்லை.

திங்களன்று, அவர் தனது பதவியிலிருந்து விலகினார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் இரண்டாவது உலகப் போருக்குப் பின்னரான காலத்தின் மிகப்பெரிய பாராளுமன்றப் பெரும்பான்மைகளில் ஒன்றை வென்ற ஒரு அரசியல்வாதிக்கு, இது ஒரு வியக்கத்தக்க வீழ்ச்சியாகும்.

ஆனால், பிரித்தானியா எதிர்கொள்ளும் பெரிய சவால்களைப் பற்றியும் இது பேசுகிறது.

பொருளாதார வளர்ச்சி ஸ்தம்பித்துப் போயுள்ளது, அரசாங்கம் பெரும் கடனில் மூழ்கியுள்ளதுடன் சுகாதாரப் பாதுகாப்பு அமைப்புக்கு போதிய நிதி இல்லை. றிஃபார்ம் கட்சி தீவிரமான குடியேற்ற-எதிர்ப்புப் கொள்கையை முன்வைத்து நகர்கிறது, இது பிரித்தானியர்களில் சுமார் கால் பகுதியினரின் ஆதரவைப் பெற்றுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேற வாக்களித்த 10 ஆண்டுகளில், பிரித்தானியா ஆறு பிரதமர்களை மாற்றிப் பார்த்துவிட்டது, ஆனால் அவர்கள் அனைவரும் நாட்டின் ஆழமான அவதிக்குத் தீர்வு காணத் தவறிவிட்டனர். இப்போது ஏழாவது பிரதமரைப் பெறவிருக்கிறது.

இது ஏதேனும் மாற்றத்தை ஏற்படுத்துமா? அடுத்ததாகப் பொறுப்பேற்கவிருப்பதாக எதிர்பார்க்கப்படும் நபர், கிரேட்டர் மான்செஸ்டரின் பிரபலமான முன்னாள் மேயரான ஆண்டி பர்ன்ஹாம் ஆவார். அவர் எப்படியாவது தொழிற்கட்சியையும், நாட்டையும் இந்த மந்தநிலையிலிருந்து மீட்டெடுப்பார் என்று அவரது கட்சியினர் பலர் நம்ப விரும்புகிறார்கள்.

ஆனால், எனது சக ஊழியர் மைக்கேல் டி. ஷியர் எழுதுவது போன்று , பர்ன்ஹாம் டவுனிங் ஸ்ட்ரீட்டை (பிரதமர் இல்லம்) அடைந்தாலும், ஸ்டார்மரை வீழ்த்திய அனைத்து சவால்களும் அப்படியேதான் இருக்கும். மேலும், கொள்கை ரீதியாக ஒரு பர்ன்ஹாம் அரசாங்கம் முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும் என்று கூறுவதற்குக் இதுவரை பெரிய சான்றுகள் எதுவும் இல்லை.

**"வடக்குப்பகுதியின் ராஜா"**

ஆண்டி பர்ன்ஹாம் நாட்டின் மிகவும் பிரபலமான தொழிற்கட்சி அரசியல்வாதி. மேலும் அவரது முதல் பெயரால் (ஆண்டி என்று) பொதுவாக அழைக்கப்படும் ஒரே நபர் அவராகத்தான் இருக்கலாம்.

56 வயதான அவர், ஸ்டார்மரை விட ஏழு ஆண்டுகள் இளையவர். அவர் வடமேற்கு பகுதியில் பிறந்து வளர்ந்தவர், அதற்கே உரிய பிராந்திய உச்சரிப்பு அவரிடம் உள்ளது. அவரது தந்தை ஒரு தொலைபேசி பொறியாளர். அவரது தாய் ஒரு மருத்துவரின் வரவேற்பாளர். லண்டன் மற்றும் பணக்கார தென்கிழக்கு பகுதிக்கு வெளியே வாழும் மக்களின் குறைகளை நன்கு புரிந்துகொண்ட ஒருவராக அவர் பார்க்கப்படுகிறார்.

அவர்களுக்காகக் குரல் கொடுப்பவர் என்ற நற்பெயரையும் அவர் பெற்றுள்ளார்.

மேயராக இருந்தபோது, மான்செஸ்டரின் பேருந்து அமைப்பு தனியார்மயமாக்கப்பட்டதைத் தலைகீழாக மாற்றி, நகரின் மையப்பகுதியில் பிரகாசமான மஞ்சள் நிற "பீ பஸ்களில்" (bee buses) இலவச மற்றும் குறைந்த கட்டணப் பயணத்தை அறிமுகப்படுத்தினார். கோவிட் - 19 காலத்தில், கடுமையான ஊரடங்கு நடவடிக்கைகளுக்கு எதிரான அவரது போராட்டங்கள் அவருக்கு "வடக்குப்பகுதியின் ராஜா" என்ற புனைப்பெயரைப் பெற்றுத் தந்தன.

இதற்கு நேர்மாறாக, ஸ்டார்மருக்கு எந்தவொரு சிறந்த புனைப்பெயரும் கிடைக்கவில்லை அவர், குறைந்தபட்சம் பொதுவெளியில், அத்தகைய நபர் அல்ல. அவரது கவர்ச்சியற்ற ஆளுமை, அவரது அரசாங்கத்தின் உறுதியான முடிவுகள் இல்லாத தன்மையை மேலும் மோசமாக்கியது. வாக்காளர்கள் இப்போது அவரை கடுமையாக வெறுக்கிறார்கள்.

இடதுசாரி இதழான "தி நியூ ஸ்டேட்ஸ்மேன்" (The New Statesman) "நீங்கள் ஏன் கீர் ஸ்டார்மரை வெறுக்கிறீர்கள்" என்ற தலைப்பிலான கட்டுரையில், "ஆண்கள் அவருக்கு நண்பராக இருக்க விரும்புவதில்லை, பெண்கள் அவரை அரவணைக்க விரும்புவதில்லை" என்று எழுதியிருந்தது.

பர்ன்ஹாம் வடிவில், தொழிற்கட்சிக்கு ஒரு சிறந்த கதையை, மிகச் சிறந்த முறையில் சொல்லக் கூடிய ஒரு கதைசொல்லி கிடைப்பார். ஆனால் இந்த நேரத்தில் பிரித்தானியாவிற்கு நல்ல கதைகளை விட மேலான ஒன்று தேவைப்படுகிறது.

**ப்ரெக்ஸிட்டுக்கு பத்து ஆண்டுகளுக்குப் பிறகு**

பிரித்தானியப் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. ப்ரெக்ஸிட் அதற்கு எந்த வகையிலும் உதவவில்லை.

பல ஆண்டுகாலமாக போதிய முதலீடுகள் செய்யப்படவில்லை. அதன் காரணமாக சுகாதாரப் பாதுகாப்பு, எரிசக்தி, போக்குவரத்து மற்றும் பாதுகாப்புத் துறைகளுக்கு அதிகப் பணம் தேவைப்படுகிறது. ஆனால் அரசாங்கத்திடம் அது இல்லை. நிதி நெருக்கடி மற்றும் தொற்றுநோய் காரணமாக, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பொதுக் கடன் 94 சதவீதமாக உள்ளது. வட்டிச் செலுத்தல்களுக்கே, ஒட்டுமொத்த பொதுக் கல்வி முறையின் வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தை விட அதிகப் பணம் செலவாகிறது.

பர்ன்ஹாமால் இதில் என்ன செய்ய முடியும் என்பது தெளிவாகத் தெரியவில்லை. கடந்த செப்டெம்பரில், பிரித்தானியா "பத்திரச் சந்தைகளுக்குக் (Bond markets) கட்டுப்பட்டு" இருக்கக் கூடாது என்று அவர் வருத்தம் தெரிவித்தார். பர்ன்ஹாமின் அரசியல் இடதுசாரி சிந்தனையை நோக்கியது என்பதால், அவர் பிரதமரானால் அதிகப் பணம் திரட்டி, அதிகமாகச் செலவிடுவார் என்பதற்கான அறிகுறியாகவே பெரும்பாலானோர் இதைக் கருதினர்.

ஆனால் அரசாங்கத்திற்குப் பணம் கடன் கொடுக்கும் பத்திர வர்த்தகர்கள் வட்டி விகிதங்களை உயர்த்தியபோது, பர்ன்ஹாம் தனது பேச்சிலிருந்து பின்வாங்கினார். பிரித்தானியாவின் கடனைக் குறைப்பதற்கான திட்டம் இருக்க வேண்டும் என்று அவர் கூறினார். மேலும், கடுமையான நிதி விதிகளுக்குத்தான் கட்டுப்பட்டு நடப்பதாகவும் அவர் கூறினார்.

அவரும் அவருக்கு முந்தையவர்களைப் போலவே அதே கடினமான சூழ்நிலைகளையும், மோசமான தேர்வுகளையுமே எதிர்கொள்கிறார் என்பதையே இது காட்டுகிறது.

பர்ன்ஹாமால் பிரித்தானியாவைச் சரிசெய்ய முடியுமா? இது உண்மையில் ஒரு கடினமான காரியம். ஆனால் அவரது பின்னணி, ஒதுக்கப்பட்ட வாக்காளர்களைப் பற்றிக் கவலைப்படாத வெஸ்ட்மின்ஸ்டர் உயரடுக்கினரைப் பற்றிய ரறிஃபார்ம் கட்சியின் விமர்சனக் கூர்மையைக் குறைக்க உதவக்கூடும். மேலும், றிஃபார்ம் கட்சியின் தலைவரான ஃபரேஜுக்கு எதிரான போட்டியில் அவரது கவர்ச்சியான ஆளுமை உதவக்கூடும்.

கடந்த வாரம் நடந்த ஒரு இடைத்தேர்தலில், 10 ஆண்டுகளுக்கு முன்பு ப்ரெக்ஸிட்டுக்கு பெருமளவில் வாக்களித்த ஒரு வடமேற்குத் தொகுதியில் பர்ன்ஹாம் தனது றஃபார்ம் கட்சி எதிராளியைத் தோற்கடித்தார்.

தற்போதைக்கு தொழிற்கட்சியின் அதி முன்னுரிமையாக இருக்கும் "றிஃபார்ம்" கட்சியை வீழ்த்துவதற்கான தகுதி அவரிடம் இருக்கக்கூடும் என்று அவரது ஆதரவாளர்கள் நம்புகிறார்கள். ஆனால் அதற்கும் வெறும் கவர்ச்சியான ஆளுமையும், வடக்குப்பகுதி உச்சரிப்பும் மட்டும் போதாது. பர்ன்ஹாம் பிரதமரானால், அடுத்த தேர்தல் வரை நல்ல விளைவுகளைக் காட்ட அவருக்கு மூன்று ஆண்டுகளுக்கும் சற்று கூடுதல் காலமே இருக்கும் அவர் அவ்வளவு காலம் பதவியில் நீடித்திருந்தால் மட்டுமே அது சாத்தியம்.

(கட்ரின் பென்ஹோல்ட், நியூயோர்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபாரத்தில் இராஜதந்திரத்தால் லாபத்தை அதிகரிப்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**இடபம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு. புதுமை படைக்கும் நாள்.

**மிதுனம்**
எதிர்பார்த்ததில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். சகோதரி உதவுவார். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு. நன்மை கிட்டும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். பாராட்டப் படுவீர்கள். மாறுபட்ட அணுகுமுறையால் சாதிக்கும் நாள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலர் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். உத்தியோகத்தில் ரகசியங்களை வெளியிட வேண்டாம். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**துலாம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பிள்ளைகளால் டென்ஷன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் வேலைச்சுமையால் சோர்வு அடைவீர்கள். அலைச்சலுடன் ஆதாயம் தரும்.

**விருட்சிகம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். மதிப்புக் கூடும்.

**தனுசு**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். முயற்சியால் முன்னேறும் நாள்.

**மகரம்**
இதுவரை இருந்த சோர்வு அசதி நீங்கி உற்சாகம் அடைவீர்கள். குடும்பத்தில் அமைதி திரும்பும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்தை முடிப்பீர்கள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டியிருக்கும்.

**மீனம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். சகோதரர்களில் அரவணைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். அலுவலத்தில் மரியாதை கூடும்.

# வவுனியாவில் போக்குவரத்து விதிமுறைகளை மீறி மாணவர்கள் பேரணி; மோட்டார் சைக்கிள் பறிமுதல்!

## பலருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல்

வவுனியா, ஜூன். 24

வவுனியா நகரில் உள்ள பிரபல ஆண்கள் பாடசாலை ஒன்றின் உயர்தர மாணவர்களால் நடத்தப்பட்ட அனுமதியற்ற வாகனப் பேரணி ஒன்றின்போது, போக்குவரத்து விதிமுறைகளை மீறிச் செயற்பட்ட குற்றச்சாட்டில் பலருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், மோட்டார் சைக்கிள் ஒன்றும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலை மாணவர்களால் வவுனியா ரயில் நிலைய வீதியில் பெரும் எண்ணிக்கையிலான மோட்டார் சைக்கிள் மற்றும் கார்களுடன் இந்தப் பேரணி முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, மாணவர்கள் கூட்டமாக வீதியை மறித்து, ஏனைய வாகனங்களுக்கும் பொதுமக்களுக்கும் பெரும் போக்குவரத்து இடையூறை ஏற்படுத்தும் வகையில் பயணித்துள்ளனர்.

அத்துடன், அதிவேக திறன் கொண்ட மோட்டார் சைக்கிள்களில் அதிக சத்தத்தை எழுப்பக்கூடிய வகையில் "சைலன்சர்கள்" பொருத்தப்பட்டிருந்ததோடு, வீதியில் ஆபத்தான முறையில் அதிவேகமாகவும் அவர்கள் வாகனங்களைச் செலுத்தியுள்ளனர்.

இது குறித்துக் கிடைத்த தகவலையடுத்து, வவுனியா பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று குறித்த பேரணியை வழிமறித்தனர்.

இதன்போது போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் போக்குவரத்து இடையூறு விளைவித்தல் (பொது வீதியில் ஏனைய வாகனங்கள் பயணிக்க முடியாதவாறு இடையூறு ஏற்படுத்தியமை), சட்டவிரோத மாற்றம் (வாகனங்களின் அசல் வடிவமைப்பு அனுமதியின்றி மாற்றியமைத்தமை), ஒலி மாசு ஏற்படுத்தல் (மோட்டார் சைக்கிள்களின் ஒலி அமைப்பை மாற்றி அதிக சத்தத்தை எழுப்பியமை), வேகமாக பயணித்தமை (பொது வீதியில் ஆபத்தான முறையில் வாகனங்களைச் செலுத்தியமை) தொடர்பிலான சட்டங்களின் கீழ் மாணவர்களுக்கு எதிராக பொலிஸாரால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த சோதனையின்போது, விதிமுறைகளை அப்பட்டமாக மீறிய குற்றச்சாட்டில் ஒரு மோட்டார் சைக்கிள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டு, வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

மேலும், போக்குவரத்து விதிமுறைகளை மீறிய பல மாணவர்களுக்கு எதிராக வவுனியா நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக வவுனியா போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# தண்ணிமுறிப்பு குளத்தில் வெள்ள முன்னெச்சரிக்கை அமைப்பை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆய்வு

முல்லைத்தீவு, ஜூன். 24

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்பு குளத்தில் வெள்ள முன்னெச்சரிக்கை அமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக்கூற்று ஆய்வு நடவடிக்கை நேற்று முன் தினம் முன்னெடுக்கப்பட்டது.

குளத்தின் வெள்ள முன்னெச்சரிக்கை அமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக்கூற்று ஆய்வில், மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர், ஐ.நா. மனித குடியிருப்பு திட்டத்தின் காலநிலை மாற்றத்துக்குத் தாங்கும் திறன் கொண்ட திட்ட அலுவலகத்தினர், நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர்கள் மற்றும் திட்டத்திற்காக நியமிக்கப்பட்ட ஆலோசகர்கள் பங்கேற்றனர்.

தண்ணிமுறிப்பு குளத்தின் தற்போதைய நிலைமைகள், அணைக்கட்டை பலப்படுத்தும் பணிகள், பழுதடைந்த கதவுகளின் சீரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் குளத்துக்கு நீர் வழங்கும் ஆறுகள் மற்றும் நீர்ப்பிடிப்பு பகுதிகள் பார்வையிடப்பட்டன.

குளத்தின் நீர்வரத்து மற்றும் நீர் மட்டத்தை கண்காணிப்பதற்கான உபகரணங்களை நிறுவுவதற்கு ஏற்ற இடங்களும் ஆய்வு செய்யப்பட்டன.

குளத்தைச் சூழவுள்ள பகுதிகளில் வெள்ள நீர் மட்டத்தை அளவிடும் கருவிகள் மற்றும் எச்சரிக்கை அமைப்புகளை நிறுவுவதற்கான சாத்தியமான இடங்களும் பரிசீலிக்கப்பட்டன.

இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்ப டுமானால், தண்ணிமுறிப்பு குளத்தின் நீர் மட்டம், நீர்வரத்து மற்றும் மழைப்பதிவு தரவுகளை அடிப்படையாகக் கொண்டு, மக்களுக்கு துரிதமான வெள்ள முன்னெச்சரிக்கை தகவல்களை வழங்க முடியும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# வட்டுக்கோட்டை கத்திக்குத்தில் ஒருவர் படுகாயம்!


யாழ்ப்பாணம், ஜூன். 24

வட்டுக்கோட்டைப் பகுதியில் இடம்பெற்ற கத்திக்குத்துத் தாக்குதலில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வழக்கம்பரை பகுதியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. அயல் வீடுகளைச் சேர்ந்த இருவருக்கிடையில் ஏற்பட்ட தகராறு பின்னர் வன்முறையாக மாறியதாக தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலில் படுகாயமடைந்த நபர் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் செயற்கை முறை கருக்கட்டல் சேவைகள்



கிளிநொச்சி, ஜூன். 24

யாழ்.பல்கலைக்கழக மருத்துவப் பீடம், கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பெண்கள் சுகாதாரப் பராமரிப்புக்கான சிறப்பு மையம், வடக்கு மாகாண சுகாதார அமைச்சு மற்றும் கிளி நொச்சி மாவட்ட நோயாளர் நலன்புரிச் சங்கம் ஆகியவற் றின் ஒத்துழைப்புடன், செயற்கை முறை கருக்கட் டல் சேவைகள் கடந்த 19ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டன.

இத்திட்டம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவப் பீடத்தின் மகப்பேறியல் மற்றும் பெண்நோயியல், சத்திரசிகிச்சை மற்றும் சமூக, குடும்ப மருத்துவத் துறைகளின் நிபுணத்துவத்துடன் முன்னெடுக்கப்படுவதுடன், கனடா யாழ்ப்பாண மருத்துவப் பீட வெளிநாட்டு பழைய மாணவர் சங்கம் மனித வள ஆதரவை வழங்கியுள்ளது. (அ)

# புத்தூர் பகுதியில் இராணுவத்தினரால் அமைக்கப்படவுள்ள வீட்டுக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், ஜூன். 24

புத்தூர் பகுதியில் இராணுவத்தின் சேவா வனிதா திட்டத்தின் கீழ், வீடு ஒன்றை நிர்மாணித்து வழங்குவதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றுக் காலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிக்கோ, வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார். இராணுவத்தில் பணியாற்றும் தமிழ் இராணுவ வீரரான லான்ஸ் கோப்ரல் எம்.ஆர். ராஜாவுக்காக இந்த வீடு நிர்மாணிக்கப்படவுள்ளது.

சேவா வனிதா திட்டத்தின் ஊடாக 1.5 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படும் இந்த வீடு, எதிர்வரும் ஜூலை மாதம் 25ஆம் திகதி பயனாளியிடம் கையளிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி, கோப்பாய் பிரதேச செயலாளர், இராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஏற்றுமதி பொருளாதாரத்தை வலுவாக்க முதலீட்டாளர்களை அழைக்கிறது அரசு!

## ஜனாதிபதி தலைமையில் கலந்துரையாடல்



கொழும்பு, ஜூன். 24

டொலர் வருமானத்தை அதிகரித்து பலமான ஏற்றுமதிப் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக ஆடைத் துறையின் பிரச்னைகளுக்கு வழங்கக் கூடிய உடனடித் தீர்வுகள் குறித்து ஆராயும் கலந்துரையாடல் ஒன்று ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

நாட்டின் முன்னணி ஆடைத் துறை வர்த்தகர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் கலந்துகொண்ட இக்கலந்துரையாடலில், ஆடைத் துறை எதிர்கொள்ளும் நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் புதிய ஏற்றுமதித் திட்டத்தை வெற்றிகரமாக்குவதற்குத் தேவையான வசதிகளை வழங்குவது குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

நாட்டின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு அரசாங்கம் அதிகபட்ச ஆதரவை வழங்கும் என இங்கு வலியுறுத்திய ஜனாதிபதி, அதற்கான எதிர்காலக் கொள்கைத் திட்டங்கள் குறித்தும் விளக்கமளித்தார்.

கைத்தொழிற்சாலைகளை கிராமப்புறங்களுக்கு விரிவுபடுத்துவதன் மூலம் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும் என மேலும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, அதற்காக ஒன்றிணையுமாறு முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து விளக்கிய ஜனாதிபதி, ரூபாயில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் அதிகரித்த போதிலும், இதனால் டொலருக்கு ஏற்படும் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு டொலர் ஈட்டும் வழிகளை வலுப்படுத்துவது அத்தியாவசியமானது எனச் சுட்டிக்காட்டினார்.

ரூபாய் செலவினங்களைக் கட்டுப்படுத்தி, டொலர் வருமானத்தை அதிகரிப்பதன் மூலம் பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

முதலீட்டாளர்கள் எதிர்கொள்ளும் காணிப் பிரச்னைகள் குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், காணிகளின் பெறுமதி மற்றும் கொள்கை ரீதியான ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் தலையிடும் எனத் தெரிவித்த ஜனாதிபதி, அதற்கான சட்ட மறுசீரமைப்புகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார். (அ)

# கடலில் குளித்தவர் மூழ்கி பலி!

கொழும்பு, ஜூன். 24

காலி- ஹபரதுவ பொலிஸ் பிரிவின் கதலுவ பகுதியில் கடலில் குளித்துக் கொண்டிருந்த ஒருவர் நேற்று முன் தினம் பிற்பகல் நீரில் மூழ்கி உயிரிழந்ததாக ஹபரதுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குருநாகல் பகுதியிலிருந்து மற்றொரு குழுவினருடன் சுற்றுலா சென்றிருந்த ஒரு குழுவினர், கதலுவ கடற்கரையில் குளித்துக் கொண்டிருந்தபோது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நீரில் அடித்துச் செல்லப்பட்டவரை, அருகிலிருந்த மக்கள் மீட்டு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

நீரில் மூழ்கி உயிரிழந்தவர் பொதுஹேர பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவர் ஆவார்.

இந்த சம்பவம் தொடர்பாக ஹபரதுவ பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸ் அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (அ)

# உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலின் உண்மை பயனாளி கர்தினால் மட்டுமே!

## உதய கம்மன்பில பகிரங்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன். 24

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் உண்மையான பயனாளி கர்தினால் மல்கம் ரஞ்சித் மாத்திரமே என பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்-

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் பின்னணியில் பிரபல நபர்கள் உள்ளார்கள்.

ஆகவே உண்மையை வெளிப்படுத்த, தான் பதவியில் இருக்க வேண்டும் என்று வத்திக்கானுக்கு கடிதம் எழுதி பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை நான்கு முறை சேவை நீடிப்பை பெற்றுக்கொண்டுள்ளார்.

குண்டுத்தாக்குதலின் உண்மையான பயனாளி கர்தினால் மாத்திரமே-என்றார். (அ)

# நாட்டில் டெங்கு நோயாளர்கள் எண்ணிக்கை 46,000 ஐ கடந்தது!

கொழும்பு, ஜூன். 24

கடந்த ஜனவரி மாதம் முதல் நேற்று வரை நாட்டில் 46,037 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக டெங்கு ஒழிப்புப் பிரிவின் பதில் பணிப்பாளர் வைத்தியர் கபில கன்னங்கர தெரிவித்துள்ளார்.

தற்போது நாளாந்தம் 600 முதல் 650 வரையான டெங்கு நோயாளர்கள் பதிவாகி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் மாத்திரம் 12,196 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகத் தெரிவித்த வைத்தியர் கபில கன்னங்கர, இது ஒரு மாதத்துக்குள் பதிவான அதிகூடிய டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை என்று குறிப்பிட்டார்.

மாகாண ரீதியாக ஒப்பிடுகையில், மேல் மாகாணத்திலேயே அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அது 51.75 வீதமாகும்.

இதேவேளை, தென் மாகாணத்தில் 16.16 வீதமாகவும், சப்ரகமுவ மாகாணத்தில் 9.35 வீதமாகவும், மத்திய மாகாணத்தில் 7.23 வீதமாகவும் மற்றும் கிழக்கு மாகாணத்தில் 5.05 வீதமாகவும் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக டெங்கு ஒழிப்புப் பிரிவின் பதில் பணிப்பாளர் வைத்தியர் கபில கன்னங்கர மேலும் கூறினார். (அ)

# மே மாதப் பணவீக்கம் 5.4 வீதமாக அதிகரிப்பு!

கொழும்பு, ஜூன். 24

இலங்கையின் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் அடிப்படையில், கடந்த ஏப்ரல் மாதத்தில் 4.7 வீதமாகக் காணப்பட்ட நாட்டின் முதன்மை பணவீக்கம் மே மாதத்தில் 5.4 வீதமாக அதிகரித்துள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள இந்தத் தரவுகள், நாடு முழுவதும் வாழ்க்கைச் செலவினங்கள் மீதான அழுத்தம் தொடர்வதை அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளன.

2021ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு ஒட்டுமொத்த விலை மாற்றங்களை அளவிடும் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண், கடந்த ஏப்ரல் மாதத்தில் 216.3 ஆக பதிவாகியிருந்த நிலையில், மே மாதத்தில் அது 218.8 ஆக உயர்வடைந்துள்ளது.

தற்போதைய பணவீக்கத் தரவுகளின்படி, உணவு மற்றும் உணவுசாரா வகைகளுக்கு இடையே தெளிவான வேறுபாடுகள் காணப்படுகின்றன.

அதன்படி, ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் ஏப்ரலில் 1.1 வீதமாக காணப்பட்ட உணவுப் பணவீக்கம் மே மாதத்தில் 1.5 வீதம் என்ற ஒப்பீட்டளவில் குறைந்த மட்டத்திலேயே அதிகரித்துள்ளது.

எனினும், உணவுசாரா பணவீக்கமானது, 7.8 வீதத்திலிருந்து 8.6 வீதமாக கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

மே மாதத்தில் நாட்டின் ஒட்டுமொத்தப் பணவீக்க உயர்வுக்கு இந்த உணவுசாரா பிரிவே முதன்மைக் காரணியாக அமைந்துள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# டெங்கு பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு முப்படைகளின் கீழ் கண்காணிப்பு பிரிவு!

## ஜனாதிபதி செயலக கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு, ஜூன். 24

இலங்கையில் அதிவேகமாகப் பரவி வரும் டெங்குவைக் கட்டுப்படுத்துவதற்காக, முப்படைகளின் தலைமையின் கீழ் இயங்கும் விசேட டெங்கு கண்காணிப்புப் பிரிவு ஒன்றை நிறுவுவதற்கு ஜனாதிபதி செயலகத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார மற்றும் ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி நலிந்த ஜயதிஸ்ஸ, மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாரநாயக்க ஆகியோரின் கூட்டுத் தலைமையில் நடைபெற்ற உயர்மட்டக் கலந்துரையாடலின் போதே இத்தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இந்த விசேட திட்டத்தின் கீழ், பிராந்திய மட்டத்திலுள்ள சமூக மற்றும் பொதுப் பாதுகாப்பு அமைப்புகளினூடாக டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்படவுள்ளதுடன், சட்ட நடவடிக்கைகளும் தீவிரமாக்கப்படவுள்ளன.

அத்துடன், நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அறநூறு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கி, இன்று முதல் மேலும் ஒரு முன்று நாள் விசேட டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கும் இங்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இன்னும் போதிய அளவில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகளுக்குப் பழகவில்லை எனத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் தற்காலிக பணிப்பாளர் மருத்துவர் கபில கன்னங்கர கவலை வெளியிட்டுள்ள பின்னணியில், கீழ் மட்ட அளவிலான விசேட திட்டங்களை வகுப்பதற்காக மாகாண மற்றும் பிராந்திய சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர்களுடன் விசேட கலந்துரையாடலொன்று நடத்தப்படவுள்ளதாகச் சுகாதார அமைச்சின் செயலாளர் விசேட மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார். (அ)

# எனக்கு ஓய்வூதியம் கூட இல்லை!

## வருத்தப்படுகின்றார் மைத்திரிபால

கொழும்பு, ஜூன். 24

ஓய்வூதியமும் ரத்து செய்யப்பட்டுவிட்டது. பொருள்களின் விலையேற்றத்தால் நானே கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளேன்." - என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-


நான் தற்போது செயற்பாட்டு அரசியலில் இல்லை. எவராக இருந்தாலும் பரவாயில்லை, நாட்டை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தால் அதனை வரவேற்க முடியும்.

எரிபொருள் விலையேம் உட்பட பொருள்களின் விலையேற்றத்தால் நான் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளேன். உங்களுக்கு சரி, (ஊடகவியலாளர்) சம்பளம் ஒன்று கிடைக்கப்பெறுகின்றது.

எனக்கு ஓய்வூதியத்தையும் இல்லாது செய்துவிட்டனர். சிறப்புரிமைகளும் இல்லை. எனவே, எனக்குதான் நெருக்கடி அதிகம்.-என்றார்.

(அ)

# கல்லடி ராமகிருஷ்ண மிஷனில் கதிர்காமம் பாதயாத்திரீகர்கள்



அம்பாறை, ஜூன். 24

யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதி ஆலயத்திலிருந்து புறப்பட்ட ஜெயா வேல்சாமி தலைமையிலான கதிர்காம பாதயாத்திரீகர்கள் ஒரு மாத கால நிறைவில் நேற்று மட்டக்களப்பு கல்லடி இராமகிருஷ்ண மிஷனை வந்தடைந்தனர்.

அங்கு இராமகிருஷ்ண மிஷன் சுவாமி சிறீமத் பிரம்மன்யானந்நா மஹராஜ் , அவர்களை வரவேற்று உபசரித்தார்.

இகிமி கல்லடி ஆச்சிரம பொது முகாமையாளர் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மஹராஜ்ஜின் வழிகாட்டலில் முன்னதாக இராமகிருஷ்ண ஆலயத்தில் பஜனை இடம்பெற்றது.

பின்னர் அன்னதானம் நடைபெற்று மணி மண்டபத்தில் அவர்கள் ஓய்வெடுத்து மாலையில் வழமை போல சிவபுரியில் வைத்திய முகாம் இடம் பெற்றது.

(அ)

போதைப்பொருள் விவகாரம்;

# பேராதனைப் பல்கலை கலைப்பீட மாணவனின் மாணவர் தகுதி ரத்து

கொழும்பு, ஜூன். 24

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விடுதி ஒன்றில் போதைப் பொருள்களுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மாணவரின், மாணவர் தகுதியை ரத்து செய்வதற்கும், அவர் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கலைப்பீடத்தில் மூன்றாம் ஆண்டு படித்து வந்த குறித்த மாணவன், பல்கலைக்கழகத்தில் போதைப்பொருள் விற்பனை செய்வதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில், அவர் விடுதியில் தங்கியிருந்த அறையை பல்கலைக்கழகத்தின் ஒழுங்கு நடவடிக்கைப் பிரிவு ஆய்வு செய்த போது, இந்தப் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், போதைப்பொருட்களை எடைபோட்டுப் பிரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் டிஜிற்றல் தராசு மற்றும் ரூ. 75,000 ரொக்கப் பணத்தையும் அந்த மாணவரிடம் இருந்து ஒழுங்கு நடவடிக்கைப் பிரிவு அதிகாரிகள் கண்டெடுத்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுத்திருந்த நிலையில், பல்கலைக்கழகமும் இது குறித்து விசாரணையைத் தொடங்கியிருந்தது.

பல்கலைக்கழகம் நடத்திய விசாரணை அறிக்கையின்படி, குறித்த மாணவரின், மாணவர் தகுதியை ரத்து செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதுடன், துணைவேந்தர் பேராசிரியர் தெரன்ஸ் மதுஜித்தின் பரிந்துரையின் பேரில் அது தொடர்பான கடிதம் மாணவரிடம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# ஐஸுடன் இருவர் கைது!

திருமலை, ஜூன். 24

திருகோணமலை - சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செல்வநகர் பகுதியில் வைத்து ஐஸ் போதைப் பொருளுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 10 கிராம் 400 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

இவர்கள் செல்வநகர், கிளிவெட்டி பகுதிகளைச் சேர்ந்த 44,28 வயதுகளையுடையவர்களாவர்.

இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் விசேட அதிரடிப்படை பொலிஸாரும் இணைந்து கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் சேருநுவர பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

# ஆரோக்கிய வாழ்வு மையங்களின் சேவைகளை மேம்படுத்த சுகாதார அலுவலர்களுக்கு பயிற்சி



அம்பாறை, ஜூன். 24

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் இயங்கிவரும் 29 ஆரோக்கிய வாழ்வு மையங்களின் சேவைகளை மேம்படுத்தி, அவற்றின் தரத்தை உயர்த்தும் நோக்கில் சுகாதார உத்தியோகத்தர்களுக்கான புத்துணர்ச்சி பயிற்சி செயலமர்வு நடைபெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் பேரில் ஏற்பாடு செய்யப்பட்ட இச்செயலமர்வு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஏ.பி. மசூத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வை, பிராந்திய தொற்றா நோய் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஏ.எஸ்.எம். பௌசாத் ஒருங்கிணைத்திருந்தார்.

இச்செயலமர்வில் ஆரோக்கிய வாழ்வு மையங்களில் கடமையாற்றும் வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், பொதுச்சுகாதார மருத்துவ மாதுக்கள், சுகாதார உதவியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். (அ)

# உயிரிழந்த நிலையில் யானை மீட்பு

திருமலை, ஜூன். 24

திருகோணமலை, சேருநுவர பொலிஸ் பிரிவிலுள்ள மஹிந்தபுர பகுதியிலுள்ள சிறிய குளத்தில் யானையொன்று உயிரிழந்த நிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

உயிரிழந்த காட்டு யானை சுமார் 35 வயதுடையதென தெரியவருகிறது.

யானை உயிரிழந்தமைக்கான காரணம் சரிவர கண்டறியப்படவில்லை. இது தொடர்பில் சேருநுவர வனவிலங்கு அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவர்கள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் பாட ஆசிரியர்களுக்கு செயலமர்வு

திருமலை, ஜூன். 24

திருகோணமலை மாவட்ட பாடசாலை ஊடகக் கழகங்களுக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் மற்றும் தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு மாவட்ட செயலகத்தின் பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட செயலகத்தின் மாவட்ட ஊடகப் பிரிவின் ஏற்பாட்டில் அரசாங்க அதிபர் டபிள்யூ.ஜி.எம். ஹேமந்தகுமார தலைமையில் விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எச்.எஸ்.கே.ஜே.பண்டாரவின் விசேட காணொளிச் செய்தி ஒளிப்பரப்பப்பட்டது.

மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யூ.ஜி.எம். ஹேமந்தகுமார, மேலதிக மாவட்ட செயலாளர் எஸ். சுதாகரன் மற்றும் மேலதிக மாவட்ட செயலாளர் ஜெ.சிறீபதி ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

ஆசிரியர்களின் பங்களிப்பை வலுப்படுத்தும் நோக்கில் அத்தியாவசியமான மூன்று தலைப்புகளில் செயலமர்வு நடத்தப்பட்டது.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சுரேஷ் சாலேயின் உயிருக்கு...

ஆணைக்குழு முன்னிலையில் சி.ஐ.டி ஒப்புக்கொண்டுள்ளதாக எதிர்க்கட்சியினர் குற்றம் சுமத்துவது தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இதற்கு பதிலளித்த அமைச்சரவை பேச்சாளர் எதிரணியினரின் இந்த கூற்றை முற்றாக நிராகரித்துள்ளார்.

"குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் உள்ள அந்த அறையானது 2024 செப்ரெம்பருக்குப் பிறகு (புதிய அரசாங்கம் வந்த பிறகு) உருவாக்கப்பட்டதொன்றல்ல. அது நீண்டகாலமாக இருக்கும் ஒரு சாதாரண தடுப்புக் காவல் அறையாகும். சுரேஷ் சலேக்காக பிரத்தியேகமாக எந்தவொரு சிறிய அறையும் உருவாக்கப்படவில்லை. சட்டபூர்வமான தடுப்புக்காவல் உத்தரவின் அடிப்படையிலேயே அவர் அங்கு வைக்கப்பட்டுள்ளார்- என்றார் அமைச்சர்.

சுரேஷ் சாலே கடந்த 16 நாள்களாக உணவு தவிர்ப்பில் இருப்பதால் அவரது உயிருக்கு ஆபத்து உள்ளதா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு, ஒரு மருத்துவர் என்ற ரீதியிலும் தற்போதைய அமைச்சர் என்ற ரீதியிலும் நளிந்த ஜயதிஸ்ஸ விளக்கமளித்தார்.

சுரேஷ் சலே வாயினால் உணவை உட்கொள்ள மறுக்கிறாரே தவிர, அவருக்கு உணவு மறுக்கப்படவில்லை. தேசிய மருத்துவமனையின் பரிந்துரைக்கு அமைய, மூக்கு வழியே செலுத்தப்பட்டுள்ள குழாய் ஊடாக அவருக்குத் தேவையான அனைத்து ஊட்டச்சத்துக்களும் திரவ வடிவில் வழங்கப்பட்டு வருகின்றன.

அவரது வீட்டிலிருந்து கொண்டு வரப்படும் உணவை, அவரது மனைவியே அந்தக் குழாய் மூலம் அவரது வயிற்றுக்குச் செலுத்துகிறார். அது போதுமானதாக இல்லை எனில், மேலதிக உணவைக் கொண்டு வருமாறு அவரது மனைவியிடம் கூற முடியும். சுரேஷ் சலே தற்போதும் சுயநினைவுடன், சாதாரணமாக ஆடை அணிந்து, நடமாடும் உடல் தகுதியிலேயே உள்ளார். எனவே, அவரது உயிருக்கு எந்தவித ஆபத்தும் இல்லை என அமைச்சர் உறுதியளித்தார்.

சுரேஷ் சலேயை விடுவிக்கக் கோரி வெளியில் போராட்டங்களை நடத்துவதோ அல்லது ஊடக சந்திப்புகளை நடத்துவதோ அர்த்தமற்றது என அமைச்சர் குறிப்பிட்டார்.

"இங்கு பிரச்னை அவருக்கு உணவு வழங்கப்படாதது அல்ல, அவர் சாப்பிட மறுப்பதுதான். எனவே, வெளியில் போதி பூசைகள் நடத்துவதையோ, மேடைகள் அமைத்துக் கூச்சலிடுவதையோ விடுத்து, அவரது மனைவியும் பிள்ளைகளும் சென்று அவரைச் சாப்பிடுமாறு கூறினால் இந்தப் பிரச்னை இப்போதே முடிவுக்கு வந்துவிடும்."-என அமைச்சர் குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் உள்ளிட்ட நாட்டின் கடந்தகால கொடூரமான குற்றச்செயல்கள் மற்றும் படுகொலைகள் குறித்து குற்றப்புலனாய்வு திணைக்களம் விரிவான விசாரணைகளை நடத்தி வருவதாகக் குறிப்பிட்ட அமைச்சர், அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதே ஒரு சட்டத்தை மதிக்கும் குடிமகனின் பொறுப்பாகும் என்றும் வலியுறுத்தினார். (அ)

## தமிழ் மக்களிடம்...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களிடமிருந்து இலங்கை இராணுவத்தினரால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு தங்க நகைகளும் பெறப்படவில்லை. இருப்பினும், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின்போது, புலிகளின் முகாம்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் சேமித்து வைக்கப்பட்டிருந்த தோராயமாக 150 கிலோகிராம் தங்க நகைகள் மட்டுமே கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த தங்க நகைகள் தற்போது இராணுவத்தின் வசம் உள்ளதோடு, அவற்றை உரியவர்களிடம் ஒப்படைக்கும் செயல்முறைக்காக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு வருகிறது. இந்த செயல்முறை நீதிமன்றம், குற்றப் புலனாய்வுத் திணைக்களம், இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆகியவற்றின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்படும் ஒரு சிக்கலான செயல்முறையாகும்.

அத்துடன், எதிர்வரும் மூன்று மாத காலத்திற்குள் இந்த ஒப்படைப்பு செயல்முறையை முழுமையாக நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கிறோம்-என்றார். (அ)

## செங்கோலை தூக்க...

நடத்துவதற்கு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குழுவொன்று சபாநாயகரிடம் முறைப்படி பிரேரணை ஒன்றை சமர்ப்பித்திருந்தது. எனினும், இந்த அவசர விவாதக் கோரிக்கையை நிராகரித்த சபாநாயகர், இதற்காக பாராளுமன்றத்தில் நேரம் ஒதுக்க முடியாது எனத் திட்டவட்டமாக அறிவித்தார்.

சபாநாயகரின் இந்த முடிவுக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையில் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

இதனைத் தொடர்ந்து, ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இடையே காரசாரமான விவாதமும், கூச்சல் குழப்பமும் ஏற்பட்டது. அத்துடன் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் செங்கோலை கைப்பற்றவும் முயன்றனர் .இதனால் பெரும் தள்ளுமுள்ளு அங்கு நிலவியது. சபை நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியாத அளவுக்குப் பதற்றமான சூழல் நிலவியதை அடுத்து, சபையை மீண்டும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நோக்கில் சபாநாயகர் பாராளுமன்றத்தை 10 நிமிடங்களுக்குத் தற்காலிகமாக ஒத்தி வைப்பதாக அறிவித்தார். இச்சம்பவம் பாராளுமன்ற வட்டாரத்தில் நேற்று பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. (அ)

## செம்மணி புதைகுழியில்...

என்புக்கூடுகள் வெளிப்பட்டுள்ளன.

அடையாளமிடப்பட்ட 409 என்புக்கூடுகள் இதுவரையில் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

நேற்றைய தினத்துடன் செம்மணிப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்த அகழ்வுப் பணிகள் மீண்டும் எதிர்வரும் ஜூலை 15ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மாணவர்களின்...

தெரிவித்துள்ளார்.

அம்பலாந்தோட்டை பகுதியிலுள்ள தேசிய பாடசாலையின் அதிபர் மற்றும் உப அதிபர் ஆகியோர், மாணவி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளான சம்பவத்தை மூடிமறைத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள பின்னணியிலேயே கல்வி அமைச்சின் செயலாளர் இந்த அதிரடி உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்ட கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ இதனைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள விசேட சுற்றறிக்கைகளின்படி, மாணவர்களைப் பாதுகாப்பதற்கான தெளிவான பொறுப்புகள் அதிபர்களுக்கே வழங்கப்பட்டுள்ளன. பாடசாலைகளுக்குள் சிறுவர் பாதுகாப்பு வழிமுறைகள் முறையாக அமுல்படுத்தப்படுவதை அவர்கள் உறுதி செய்ய வேண்டும்.

பாடசாலைகளில் ஒழுக்கத்தைப் பேணுவது தொடர்பான 12/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின்படி, மாணவர்கள் எவ்விதமான உடல் அல்லது உளவியல் ரீதியான பாதிப்புகளுக்கும் உள்ளாகாமல் இருப்பதை பாடசாலை நிர்வாகம் உறுதி செய்ய வேண்டும்.

அனைத்துப் பாடசாலைகளிலும் "பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்கள்" அமைக்கப்பட வேண்டும். இதன் மூலம் மாணவர்களுக்கான அச்சுறுத்தல்களைக் கண்டறிந்து, புகார்களுக்குச் சரியான முறையில் தீர்வு காண வேண்டும்-என்றார். (அ)

## சாலேயின் குடும்பம்...

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த சுரேஷ் சாலே, அண்மையில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்ததாகவும், பின்னர் உடல்நிலை மோசமடைந்ததை அடுத்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே, சாலே விவகாரம் தொடர்பாக இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் சில அருட்தந்தையர்கள் அண்மையில் கருத்துகளை வெளியிட்டிருந்த சூழ்நிலையிலேயே இக்கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## புதிய அரசமைப்பு...

ஏற்பாடுகள் அனைத்தும் நிறைவுபெற்று, இறுதி கட்டத்தில் உள்ளது எனவும் அவர் கூறினார்.

தனியார் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே பிரதமர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

அரசமைப்பு மறுசீரமைப்பைவிட, புதிய அரசமைப்புக்கு செல்வதே எமது எதிர்பார்ப்பாகும். தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இந்த வாக்குறுதி வழங்கப்பட்டது. புதிய அரசமைப்பு கொண்டு வரப்பட வேண்டும் என்ற விடயத்தில் நாம் உறுதியாக உள்ளோம். அதற்குரிய பேச்சுகள் இடம்பெற்றன.

நடவடிக்கை இடம்பெறுகின்றது. எனினும், அந்த விடயத்துக்கு தற்போது முன்னுரிமை வழங்கப்படவில்லை என்பதை ஏற்கின்றோம். ஏனெனில் நாட்டில் பொருளாதாரம், அபிவிருத்தி மற்றும் வறுமை ஒழிப்புக்கே தற்போது கூடுதல் கவனம் செலுத்தியுள்ளோம். பயங்கரவாத தடைச்சட்டம் இந்த வருடத்துக்குள் நீக்கப் படும். அதற்குரிய நடவடிக்கை முடிந்துவிட்டது. அமைச்ச ரவைக்கு யோசனை வரும். நிறைவேற்று ஜனாதிபதி அதிகார முறைமை நீக்கம், புதிய அரசமைப்புடன் தொடர்புபட்ட விடயமாகும்.

மக்கள் அனுமதியுடன் புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும். இன்னும் மூன்று வருடங்கள் உள்ளது. இந்த காலப்பகுதி போதுமானது. அதற்கு பிறகும் மக்கள் எமக்கே ஆணை வழங்குவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது-என்றார். (அ)

## மக்களின் காணிக்குள்...

மேலாக தனியார் காணிகளில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள நிலையில்,, தமது காணிகளை விடுவிக்குமாறு மக்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

இந்நிலையில், குரும்பசிட்டிப் பகுதியில் உள்ள தனியார் காணிகளில் இராணுவத்தினர் நீண்ட காலமாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த பகுதியை இராணுவத்தினரின் விவசாயப் பண்ணை பகுதியாக அறிவித்து பெயர்ப்பலகை நாட்டும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டு உள்ளமை, அப்பகுதி மக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

வலி.வடக்கில் காணி விடுவிப்பு தொடர்பில் ஆராய்வதற்கு பாதுகாப்பு பிரதி அமைச்சர் தலைமையிலான குழுவினர் யாழ். வருகை தந்து ஆராய்ந்து சென்றுள்ள நிலையில்-

நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ள பாதுகாப்பு அமைச்சின் உயர்மட்டக் கலந்துரையாடலில் காணி விடுவிப்பு தொடர்பில் முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டு, காணி உரிமையாளர்களுக்கு சாதகமான பதில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில்- இராணுவத்தினர் தமது விவசாயப் பண்ணைக்கு பெயர்ப்பலகை நாட்டும் செயலில் ஈடுபட்டுள்ளனர். (அ)

## காணிப் பிரச்னைகளை...

பிரச்னைகளைத் தீர்த்து, அவர்களுக்கான ஆவணங்களை வழங்கி வைக்கவேண்டியது அதிகாரிகள் அனைவரதும் பொறுப்பும் கடமையுமாகும் என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்றேன் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தின் ஏற்பாட்டில், கிளிநொச்சி மாவட்டத்தின் "5 ஆண்டுச் செயலாற்றுகை" தொடர்பான விசேட மீளாய்வுக் கூட்டம், கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை ஆளுநர் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வரவேற்புரையாற்றிய கிளிநொச்சி மாவட்ட செயலாளர் சு.முரளிதரன், இலங்கையிலுள்ள 25 மாவட்டங்களிலும் காணிப் பிரச்னைகள் அதிகளவில் தீர்க்கப்படாத மாவட்டமாக கிளிநொச்சி காணப்படுவதாகச் சுட்டிக்காட்டினார். காணிப் பிணக்குகள் எதுவுமற்ற 8,600 பேர் காணி ஆவணங்களைக் கோரி விண்ணப்பித்துள்ள நிலையில், கடந்த ஆண்டு நவம்பர் மாதம் இச்செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டபோதிலும், எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் இதற்கான முன்னேற்றம் எட்டப்படவில்லை எனவும் அவர் கவலை வெளியிட்டார்.

இதனைத் தொடர்ந்து தலைமையுரையாற்றிய ஆளுநர் நா. வேதநாயகன் மேலும் குறிப்பிட்டதாவது:

-கிளிநொச்சி மாவட்டத்தில் பல தொழில் முயற்சியாளர்கள் தமக்குரிய காணி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடியாத காரணத்தால், வங்கிகளில் கடன்களைக் கூடப் பெற முடியாத நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளனர். மேதகு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அவர்களால் மக்களுக்குக் காணி உரித்துக்களை வழங்கும் "ஹிமிகம" வேலைத்திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன், ஐக்கிய நாடுகள் சபையின் உதவியுடனும் காணிப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

போர் காரணமாக காணி ஆவணங்கள் மாவட்டச் செயலகங்களிலும் ,ல்லை மக்களிடமும் இல்லை. இதனால் மக்கள் காணிப் பிணக்குகளுடன் ஒவ்வொரு அலுவலகமாக அலைந்து கொண்டிருக்கின்றார்கள். நிலைமை இவ்வாறிருக்க, அதிகாரிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டிய நிலையில், சில அதிகாரிகள் பொறுப்பற்று மக்களின் காணிப் பிரச்னைகளை மேலும் சிக்கலாக்கும் வகையிலேயே செயற்படுகின்றனர். திங்கள்கிழமைகளில் அலுவலகங்களுக்குச் சென்றால்கூட, காணி தொடர்பான அதிகாரிகளைச் சந்தித்துப் பேச முடியாத நிலைமை காணப்படுவதாக மக்கள் என்னிடம் நேரடியாகவே முறையிட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் காணிகள் வழங்கல் மற்றும் பிணக்குகளைத் தீர்ப்பதில் அரசியல் தலையீடுகள் காணப்பட்டன. அதிகாரிகள் சுயாதீனமாகச் செயற்பட முடியாத நிலை இருந்தது. ஆனால், தற்போது அந்த நிலைமை இல்லை. நீங்கள் சுயாதீனமாகவும், நீதியான முறையிலும் மக்களின் பிரச்னைகளைத் தீர்க்க முடியும். மாவட்டச் செயலாளரும், மாகாண காணி ஆணையாளரும் பல முயற்சிகளை எடுத்தாலும், கீழ் மட்டத்திலுள்ள அதிகாரிகள் போதிய ஒத்துழைப்பை வழங்குவதில்லை என்பது மிகவும் கவலைக்குரியது. இந்தப் பிரச்னையைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது. இதற்கு ஒரு முடிவு காண்பதற்கு அனைவரதும் முழுமையான ஒத்துழைப்பைக் கோருகின்றேன்," என ஆளுநர் தனது உரையில் ஆணித்தரமாகத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு ரீதியாகவும் முன்னெடுக்கப்பட்ட காணி நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. செயலாற்றுகையில் பின்னடைவைக் கண்டுள்ள பிரதேச செயலகங்களின் காணி உத்தியோகத்தர்களிடம் இதன்போது விளக்கம் கோரப்பட்டதுடன், அவர்களுக்கான புதிய இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு அவை கட்டாயம் நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் பணிக்கப்பட்டது. அலுவலர்களுக்கான கொடுப்பனவுகள் உள்ளிட்ட வசதிகள் செய்து வழங்கப்பட்டுள்ள நிலையில், அவர்கள் திறம்படப் பணியாற்ற வேண்டும் என ஆளுநர் வலியுறுத்தினார். அத்துடன், அலுவலர்களின் தனிப்பட்ட செயலாற்றுகை முன்னேற்றங்கள் இனித் தீவிரமாகக் கண்காணிக்கப்படும் என மாகாண காணி ஆணையாளர் ,தன்போது குறிப்பிட்டார்.

மேலும், கிளிநொச்சி மாவட்டத்தின் பளை மற்றும் பூநகரி பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு உட்பட்ட காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் காணிப் பிணக்குகள் தொடர்பாகவும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. (அ)

## ஞானசார தேரருக்கு...

விடுவித்து விடுதலை செய்யுமாறு கோரி ஞானசார தேரரினால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை நிராகரித்து, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.

கடந்த 2016ஆம் ஆண்டு கிருலப்பனைப் பகுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில், இஸ்லாமிய மார்க்கத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டு, இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் செயற்பட்டார் எனக் குற்றம் சுமத்தி, தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் பொலிஸாரினால் ஞானசார தேரருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

வழக்கு விசாரணைகளின் பின்னர், இந்தக் குற்றச்சாட்டில் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டதை அடுத்து கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் இந்தத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தேர்தல்களில்...

2004 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்ட தேர்தல்களில் பின்வரும் இரண்டு நடைமுறைகளும் கட்டாயமாக்கப்பட்டிருந்தன.

வாக்களிக்க வரும் வாக்காளர்கள் தங்களது செல்லுபடியான அடையாள அட்டையை சமர்ப்பித்து ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல். வாக்களித்த பின்னர் வாக்காளர்களின் விரலில் அழியாத பூச்சை (மை) பயன்படுத்தி அடையாளமிடுதல்.

வாக்காளர் ஒருவர் ஒரு தேர்தலில் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் வாக்களிப்பதை (கள்ளவாக்கு) தடுப்பதே இந்த இரண்டு பணிகளினதும் ஒரே எதிர்பார்ப்பாகும்.

ஒரே நோக்கத்திற்காக ஒன்றுக்கொன்று வேறான இரண்டு முறைமைகளைக் கடைப்பிடிப்பதனால், வாக்கெடுப்பு நிலையங்களில் கடமைகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்குத் தடையாக உள்ளது என அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்த இரட்டை நடைமுறை காரணமாக அரசாங்கத்துக்கு வீணான மேலதிக செலவுகள் ஏற்படுவதும் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, அடையாள அட்டை மூலம் ஆளடையாளம் கட்டாயமாக உறுதிப்படுத்தப்படுவதால், இனிவரும் காலங்களில் அழியாத பூச்சை பயன்படுத்தி வாக்காளர்களை அடையாளமிடும் சட்டரீதியான ஏற்பாடுகளை அனைத்து தேர்தல் சட்டங்களிலிருந்தும் நீக்குவது பொருத்தமானதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் யோசனைக்கு அமைவாக, இதனுடன் தொடர்புடைய பின்வரும் தேர்தல் சட்ட ரீதியான ஏற்பாடுகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது:-

1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தின் 36 ஆம் பிரிவு.

1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல் சட்டத்தின் 38 ஆம் பிரிவு.

1988 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தின் 36 ஆம் பிரிவு.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்: (262 ஆம் அத்தியாயமான) உள்ளூராட்சி அதிகாரசபை தேர்தல் கட்டளைச்சட்டத்தின் 53அ பிரிவு.

மக்கள் தீர்ப்பு: 1981 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க மக்கள் தீர்ப்பு சட்டத்தின் 21 ஆம் பிரிவு.

இதன்படி, இனிவரும் தேர்தல்களில் வாக்காளர்களின் விரலில் மை வைக்கும் பாரம்பரிய நடைமுறை இல்லாமல் போவதுடன், அடையாள அட்டையைச் சரிபார்க்கும் முறை மட்டுமே பிரதானமாகப் பயன்படுத்தப்படவுள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# பருத்தித்துறை வெளிச்ச வீட்டுப் பகுதியை இராணுவத்திடமிருந்து விடுவிக்க ஏற்பாடு!

## நேரில் சென்று ஆராய்ந்தார் இளங்குமரன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஜுன். 24

பருத்தித்துறை பகுதியில் உள்ள கலங்கரை விளக்கு (வெளிச்ச வீடு) பகுதிகளை இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 31 வருடங்களுக்கு மேலாக பருத்தித்துறை வெளிச்ச வீட்டுப் பகுதியை ஆக்கிரமித்து இராணுவத்தினர் முகாம் அமைத்துள்ளனர்.

அதனால் வெளிச்ச வீட்டு பகுதியை மக்கள் பார்வையிடவே, அவற்றை புகைப்படம் காணொளி எடுப்பதற்கோ இராணுவத்தினர் அனுமதி மறுத்திருந்தனர்.

இந்நிலையில், வெளிச்ச வீடு அமைந்துள்ள பகுதியை இராணுவ கட்டுப்பாட்டில் இருந்து விடுவித்து, சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் அதனைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதனை அடுத்து நேற்று முன் தினம் திங்கள்கிழமை அப்பகுதிக்குச் சென்ற தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் வெளிச்ச வீட்டுப் பகுதியை பார்வையிட்டார்.

குறித்த பிரதேசத்தில் சுற்றுலாப் பயணிகள் முழுமையாக சுற்றிப் பார்வையிடும் வகையில் தேவையான ஏற்பாடுகளை வெகுவிரைவில் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வரலாற்றுச் சின்னம் மீண்டும் சேதமடையாமல் நீண்ட காலம் பேணிப் பாதுகாக்கும் வகையிலான பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும்.

சுற்றுலாத்துறையின் வளர்ச்சியையும், எமது பாரம்பரிய மரபுச் சின்னங்களின் பாதுகாப்பையும் ஒருங்கிணைத்து செயற்படுவதே எமது நோக்கமாகும் என வெளிச்ச வீட்டை பார்வையிட்ட பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்தார். (அ)

## வழிபாட்டுத் தலங்களில் ஒலிபெருக்கு பாவனை சமூகப் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும்

### யாழ். அரச அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜுன் 24

வழிபாட்டுத் தலங்களில் ஒலிபெருக்கி சாதனங்களைப் பயன்படுத்தும் போது சமூகப் பொறுப்புணர்வுடன் செயற்பட்டு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ்ப்பாண மாவட்ட செயலர் ம. பிரதீபன் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர், சில வழிபாட்டுத் தலங்களில் ஒலிபெருக்கி மூலம் அதிக சத்தம் எழுப்பப்படுவதால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

புலமைப்பரிசில், க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளுக்குத் தயாராகும் மாணவர்கள் உட்பட கல்வி கற்கும் அனைவரும் இதனால் சிரமங்களை எதிர்கொள்வதாகவும், எதிர்காலச் சந்ததியின் கல்வி முன்னேற்றம் பாதிக்கப்படும் அபாயம் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், வழிபாட்டுத் தலங்களை அண்மித்த பகுதிகளில் வசிக்கும் முதியோர் மற்றும் நோயாளிகளின் உடல், உள ஆரோக்கியத்திற்கும் அதிக ஒலி பாதிப்பை ஏற்படுத்துவதாகவும், பிரதான வீதியோரங்களில் அதிக ஒலி காரணமாக விபத்து அபாயங்களும் ஏற்படக்கூடும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மக்களுக்கு ஆரோக்கியமான சமூக சூழலை உருவாக்கும் பொறுப்பு வழிபாட்டுத் தலங்களுக்கும் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ள மாவட்ட செயலர், ஆன்மீகத்தைப் போதிக்கும் நிலையங்கள் மனிதாபிமான அடிப்படையில் செயற்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறான செயற்பாடுகள் தொடருமானால் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்த வேண்டிய நிலை ஏற்படலாம் எனவும் அவர் எச்சரித்துள்ளார். (அ)

## டெங்கு பரவல் நாட்டில் தீவிரம்

# 538 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் அதி அவதான வலயங்களாக அறிவிப்பு

கொழும்பு, ஜுன். 24

நாடு முழுவதும் டெங்கு பரவலைக் கட்டுப்படுத்துவதற்கும், டெங்கு நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கும் இலங்கையின் 14 மாவட்டங்களுக்கு உட்பட்ட 538 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் அதி அவதான வலயங்களாக அறிவிக்கப்பட்டு, அரசாங்க தகவல் திணைக்களத்தினால் விசேட அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையின்படி, மேல் மாகாணமே அதிகளவான பாதிப்புக்குள்ளாகியுள்ளதுடன், கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களின் பெரும்பாலான கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இதில் உள்வாங்கப்பட்டுள்ளன.

கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு மாநகர சபை அதிகாரப் பகுதி, மஹரகம, பிலியந்தலை, ஹோமாகம, கடுவலை, பொரலஸ் கமுவ, தெஹிவளை, எகொடஉயன மற்றும் கொதடுவ போன்ற பல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் அதிஅவதானமிக்கவை என அடையாளம் காணப்பட்டுள்ளன.

அதேபோல், கம்பஹா மாவட்டத்தில் அத்தனகல்ல, சீதுவை, களனி, ராகம, மினுவாங்கொடை, நீர்கொழும்பு, பியகம, வத்தளை, கட்டான மற்றும் மஹர உள்ளிட்ட பல பகுதிகளின் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் இந்த அவதானப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

களுத்துறை மாவட்டத்தில் பண்டாரகம, ஹொரணை, இங்கிரிய, மத்துகம, பாணந்துறை, வத்துவை, களுத்துறை மற்றும் பாயாகல ஆகிய பகுதிகளின் பிரிவுகள் இதன் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக காலி, அம்பாந்தோட்டை, மாத்தறை, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, குருநாகல், புத்தளம், பதுளை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் இந்த அதிஅவதானப் பட்டியலில் அடங்குவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## தேர்தல் செலவீன அறிக்கை சமர்ப்பிக்காத வேட்பாளர்களுக்கு மன்னிப்பு கிடையாது!

### தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, ஜுன். 24

தேர்தல் பிரசார செலவீன அறிக்கைகளை உரியக் காலக்கெடுவுக்குள் சமர்ப்பிக்கத் தவறிய அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் வேட்பாளர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கவோ, அல்லது அவர்களுக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள நீதிமன்ற வழக்குகளைத் திரும்பப் பெறவோ முடியாது எனத் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

2023ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவீனங்களை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின்கீழ், ஜனாதிபதி, பாராளுமன்றம் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிட்டு அறிக்கைகளைச் சமர்ப்பிக்கத் தவறிய தரப்பினருக்கு எதிராக அநேகமான அனைத்து மாவட்டங்களிலும் ஏற்கனவே வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த வழக்குகள் அந்தந்த மாவட்ட நீதிமன்றங்களில் தற்பொழுது விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள நிலையில், நீதிமன்றத் தவணைகளுக்காகக் காலி, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை போன்ற தூரப் பிரதேசங்களுக்குப் பயணம் செய்யவேண்டியுள்ளதால் வழக்குகளை மீளப் பெறுமாறு சில கட்சிச் செயலாளர்கள் விடுத்த கோரிக்கைகளையும், பொது மன்னிப்பு வழங்குமாறு கோரிய விண்ணப்பங்களையும் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக நிராகரித்துள்ளது.

குறித்த விவகாரங்கள் யாவும் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டவை என்பதால், இதில் தேர்தல் ஆணைக்குழு தன்னிச்சையாகத் தலையிட முடியாது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உரியத் திகதிக்குள் அறிக்கைகளைச் சமர்ப்பிக்காதவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் மட்டுமே ஆணைக்குழுவுக்கு உள்ளதாகத் தெரிவித்துள்ள தவிசாளர், சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் உள்ள குறைபாடுகள் அல்லது தவறுகள் குறித்து தங்களால் எவ்வித உத்தியோகபூர்வ நடவடிக்கைகளையும் எடுக்க முடியாது எனவும், பொதுமக்கள் மட்டுமே அவற்றை ஆராய்ந்து சட்டப்படி சவாலுக்கு உட்படுத்த முடியும் எனவும் விபரித்துள்ளார். (அ)

# விளையாட்டு உபகரணங்கள் பகிர்ந்தளிப்பு; அரசு - எதிர்க்கட்சி சபையில் கடும் விவாதம்!

கொழும்பு, ஜுன். 24

பாராளுமன்றத்தில் விளையாட்டு உபகரணங்கள் பகிர்ந்தளிப்பு மற்றும் பரவலாக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு தொடர்பாக ஆளும் தரப்புக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் காரசாரமான விவாதம் இடம்பெற்றது.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சானக மாதுகொட, கடந்த காலங்களில் பரவலாக்கப்பட்ட நிதி மூலம் கிராமப்புற விளையாட்டு கழகங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு பெருமளவில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டதாக தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்தின் கடுமையான நிபந்தனைகள் மற்றும் நிதி கட்டுப்பாடுகள் காரணமாக கிராமப்புற விளையாட்டுத்துறை பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும், நிதி ஒதுக்கீட்டு நடைமுறையை எளிமைப்படுத்தி வலுப்படுத்துமாறும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இதற்கு பதிலளித்த விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே,

கடந்த காலங்களில் விளையாட்டு உபகரணங்கள் பகிர்ந்தளிப்பு அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டதாக குற்றஞ்சாட்டினார். தேவையற்ற இடங்களுக்கும் வாக்கு சேகரிப்பு நோக்கில் உபகரணங்கள் வழங்கப்பட்ட பழைய அரசியல் கலாச்சாரத்தை தற்போதைய அரசு மாற்றியமைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர்களை பிரபலப்படுத்துவதற்காக அல்லாது, நாட்டில் விளையாட்டை மேம்படுத்தும் நோக்கிலேயே புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், விளையாட்டு உபகரணங்களுக்கு விசேட வரிகள் விதிக்கப்படவில்லை என்றும், பெரும்பாலான பொருள்கள் இறக்குமதி செய்யப்படுவதால் உலக சந்தை நிலவரத்திற்கு ஏற்பவே விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன என்றும் அவர் கூறினார்.

# சிறுவர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை துரிதப்படுத்த அரசு விசேட அவதானம்

கொழும்பு, ஜுன். 24

சிறுவர்கள் சம்பந்தப்பட்ட நீதிமன்ற வழக்குகளைத் துரிதப்படுத்துவது குறித்து நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு விசேட அவதானம் செலுத்தியுள்ளது.

நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார மற்றும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் குழுவுக்கும் இடையே நீதி அமைச்சில் நடைபெற்ற உத்தியோகபூர்வ சந்திப்பின்போதே இந்த விவகாரம் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

சிறுவர்கள் சாட்சியமளிக்கும் போது ஏற்படும் உளவியல் ரீதியான பாதிப்புகளைக் குறைக்கும் நோக்கில், அவர்கள் வீடியோ தொழில்நுட்பம் ஊடாக நீதிமன்றங்களுக்குச் சாட்சியமளிப்பதற்கான நவீன உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது குறித்தும் இதன் போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இந்த புதிய சாட்சியமளிக்கும் செயல்முறை மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து தற்பொழுது நாடளாவிய ரீதியில் நீதிபதிகளுக்கு உத்தியோகபூர்வமாக விழிப்புணர்வுகள் ஊட்டப்பட்டு வருவதாகவும், இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மிக வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார இதன்போது மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.06.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org